தமிழ் முரசு

நான் முதல்வன் திட்டத்தின் கீழ் உயர்கல்வியுடன் பணி

பிளஸ் 2 தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கு 17ம் தேதி தேர்வு

ஈரோடு, ஆக. 15- தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகம் சார்பில் தனியார் மென்பொருள் நிறுவனத்தின் மூலம் உயர் கல்வி படித்துக்கொண்டு பணியாற்றுவதற்கான தேர்வு வருகிற 17ம் தேதி நடைபெற உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து கலெக்டர் ராஜகோபால் சுன்கரா வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு:

தமிழக முதல்வரின் 'நான் முதல்வன்' திட்டத்தின் கீழ் தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகம் தனியார் மென்பொருள் நிறுவனத்துடன் இணைந்து அரசு மற்றும் அரசு உதவி பெறும், மெட்ரிக் மற்றும் சிபிஎஸ்சி பள்ளிகளில் 2023-24 கல்வியாண்டில் பிளஸ் 2 பொதுத் தேர்வில் தேர்ச்சி பெற்று 75 சதவீத மதிப்பெண் பெற்றுள்ள கலை பாடப்பிரிவு மாணவ மாணவிகளுக்கு பல்கலைக் கழகங்களில் உயர் கல்வி மற்றும் பயிற்சியுடன் பணி வாய்ப்பை வழங்குகிறது. இதற்கான எழுத்து தேர்வு கோபி பிகேஆர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் வருகிற 17ம் தேதியும், காங்கயம் நத்தக்காடையூர் பில்டர்ஸ் பொறியியல் கல்லூரியில் 18ம் தேதி நடைபெற உள்ளது. இத்தேர்வு எழுதுவதற்கு video link-ஐ https://youtu.be/yyAPZYtYP40 பார்த்த பின்னர் https://registrations.hcltechbee.com/ link-ஐ பயன்படுத்தி மாணவர்கள் தங்களுடைய விபரங்களை பதிவிட வேண்டும்.

இத்தேர்வு எழுத அரசு, அரசு உதவி பெறும் பள்ளி மற்றும் மெட்ரிக் பள்ளி மாணவர்கள் 75 சதவீத மதிப்பெண்களும், சிபிஎஸ்சி மாணவர்கள் 70 சதவீத மதிப்பெண்களும் பெற்றிருக்க வேண்டும். கணிதம் மற்றும் வணிக கணிதம் பயிலாத மாணவர்கள் மட்டும் கலந்து கொள்ளவும். மாணவர்கள் தங்கள் அருகில் உள்ள தேர்வு மையங்களில் கலந்து கொள்ளலாம். தேர்வு எழுத வரும் மாணவ, மாணவியர் தங்களின் கல்விச் சான்றிதழ் நகல், ஆதார் அட்டை நகல், பதிவு செய்த மொபைல் எண்ணுடன் கூடிய செல்போன் கொண்டுவரவேண்டும்.

இத்திட்டத்தின் வாயிலாக அரசுப் பள்ளி மாணவர்களுக்குப் பயிற்சிக் கட்டணம் முழுவதையும் தமிழ்நாடு அரசுத் திறன் மேம்பாட்டுக் கழகம் வழங்கும். பயிற்சியின் போது மாதம் தோறும் ரூ.10 ஆயிரம் உதவித்தொகை பெறலாம். பணியில் சேர்ந்தவுடனே துவக்க நிலை ஊதியமாக ஆண்டுக்கு ரூ.1.70 லட்சம் வரை பெறலாம். எனவே இந்த அரிய வாய்ப்பை மாணவர்கள் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

சுதந்திர தினத்தை முன்னிட்டு, ஈரோடு மாநகராட்சி அலுவலகத்தில் மேயர் நாகரத்தினம் இன்று தேசியக் கொடியை ஏற்றி வைத்து மரியாதை செலுத்தினார். அருகில் மாநகராட்சி கமிஷனர் டாக்டர் மனிஷ் உள்ளிட்ட பலர் உள்ளனர்.

தடுப்பு சுவரில் பைக் மோதியது பாலத்திலிருந்து விழுந்தவர் பலி

திருப்பூர், ஆக. 15- தடுப்பு சுவரில் பைக் மோதிய விபத்தில் பாலத்திலிருந்து விழுந்த வாலிபர் பலியானார்.

திருப்பூர் ராக்கியாபாளையம் பிரிவு மகாலட்சுமி நகரை சேர்ந்தவர் தமிழ்ச்செல்வன் (23). இவர் நேற்று இரவு விஜயமங்கலத்தில் இருந்து பைக்கில் ராக்கியாபாளையம் பிரிவு அருகே வந்து கொண்டிருந்தார். ஊத்துக்குளியை கடந்து திம்மநாயக்கன்பாளையம் ரயில்வே மேம்பாலத்தின் மீது சென்று கொண்டிருந்தபோது எதிர்பாராத விதமாக அவர் சென்ற பைக் பாலத்தின் தடுப்பு சுவர் மீது மோதியது.

இதில் தமிழ்ச்செல்வன் பாலத்தின் மேலிருந்து கீழே விழுந்தார். இதில் படுகாயமடைந்த தமிழ்ச்செல்வனை அருகில் இருந்தவர்கள் மீட்டு திருப்பூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தனர். அங்கு அவரை பரிசோதித்த மருத்துவர்கள் தமிழ்ச்செல்வன் ஏற்கனவே இறந்து விட்டதாக தெரிவித்தனர். இது குறித்து ஊத்துக்குளி போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

பலவஞ்சிப்பாளையம் பகுதியில் 17ல் மின் தடை

திருப்பூர், ஆக. 15- திருப்பூர் சந்தைபேட்டை, பலவஞ்சிப்பாளையம் மற்றும் கலெக்டர் அலுவலக துணை மின் நிலையங்களில் பராமரிப்பு பணி வருகிற 17ம் தேதி நடைபெற உள்ளது.

எனவே அன்று காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை சந்தைபேட்டை துணை மின் நிலையத்துக் குட்பட்ட அரண்மனைப்புதூர், தட்டான் தோட்டம், எம்.ஜி.புதூர், கரட்டாங்காடு, அரசு மருத்துவமனை காலனி, தாராபுரம் ரோடு, பல்லடம் ரோடு, தென்னம்பாளையம், கல்லாங்காடு, வெள்ளியங்காடு, கே.எம். நகர், கே.எம்.ஜி.நகர், பட்டுக்கோட்டையார் நகர், திரு.வி.க.நகர், கருப்பகவுண்டம்பாளையம், கோபால் நகர், பெரிச்சிபாளையம், கருவம்பாளையம், ஏ.பி.டி. நகர், கே.வி.ஆர்.நகர், பூச்சக்காடு, மங்கலம் ரோடு, பெரியார் காலனி, சபாபதிபுரம், வாலிபாளையம், ஊத்துக்குளி ரோடு, யூனியன் மில் ரோடு, மின் வீதி, காமராஜ் ரோடு, புதுமார்க்கெட் வீதி, ராயபுரம், ஸ்டேட் பாங்க் காலனி, காதர்பேட்டை, செட்டிபாளையம், பலவஞ்சிபாளையம், சந்திராபுரம், புதூர் மெயின்ரோடு, தாராபுரம் ரோடு, பூம்புகார், இந்திரா நகர், கலெக்டர் அலுவலக வளாகம், பல்லடம் ரோடு, வித்யாலயம், பாரதிநகர், குளத்துபாளையம், செல்வலட்சுமி நகர், வீரபாண்டி, பொது சுத்திகரிப்பு நிலைய பகுதிகள், கருப்பக்கவுண்டன்பாளையம், கே.ஆர்.ஆர். தோட்டம், சந்திராபுரம், கரட்டாங்காடு, செரங்காடு, டி.ஏ.பி.நகர், என்.பி.நகர், காளிநாதம்பாளையம் ஆகிய பகுதிகளில் மின் வினியோகம் இருக்காது. இந்த தகவலை மின்வாரிய செயற்பொறியாளர் ராமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

மதுவில் விஷம் கலந்து குடித்து வாலிபர் தற்கொலை

ஈரோடு, ஆக. 15- சென்னிமலை அருணகிரிநாதர் வீதியை சேர்ந்தவர் ராஜா. இவரது மகன் சிவா என்கிற கிரிராஜ் (28). இவர் உரக்கடையில் வேலை செய்து வந்தார். சமீபகாலமாக குடிப்பழக்கத்திற்கு அடிமையான கிரிராஜ் சரிவர வேலைக்கு செல்லாமல் வீட்டில் இருந்து வந்தார். இந்நிலையில் கடந்த 4ம் தேதி வீட்டில் இருந்த கிரிராஜ் வாந்தி எடுத்தார். இதுகுறித்து பெற்றோர்கள் கேட்ட போது மதுவில் விஷம் கலந்து குடித்து விட்டதாக கூறியுள்ளார். இதையடுத்து ஆம்புலன்ஸ் மூலம் ஈரோடு அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தார். இந்நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று கிரிராஜ் பரிதாபமாக உயிரிழந்தார். இதுகுறித்து சென்னிமலை போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

முன்னாள் ராணுவ வீரர் நல சங்கம் சார்பில் சுதந்திர தின விழா

உடுமலை, ஆக. 15- உடுமலை முன்னாள் ராணுவ வீரர்கள் நல சங்கத்தின் சார்பில் சுதந்திர தின விழா நேதாஜி மைதானத்தில் கொண்டாடப்பட்டது விழாவுக்கு முன்னாள் ராணுவ நல சங்க தலைவர் ராமலிங்கம் தலைமை வகித்தார். இதில் சிறப்பு அழைப்பாளராக நீல கண்டன் கலந்து கொண்டு தேசிய கொடி ஏற்றினார். நிகழ்ச்சியில் நேதாஜி நடைப்பயிற்சி நிர்வாகிகள், விளையாட்டு பயிற்சியாளர்கள் மற்றும் இந்திய முன்னாள் ராணுவ வீரர்கள் குழந்தைகள், பொது மக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். மேலும் உடுமலை, மடத்துக்குளம் பகுதிகளை சேர்ந்த 10ம் வகுப்பு மற்றும் 12ம் வகுப்பு பொதுத் தேர்வில் முதல் 3 இடங்களை பெற்ற மாணவிகளுக்கு சான்றிதழ் மற்றும் கேடயம் பரிசு வழங்கப்பட்டது. ஓவியக் கனி மொழி என்பவர் 78 சுதந்திர போராட்ட வீரர்களின் உருவப்படங்களை வரைந்து காட்சிப்படுத்தினார்.

உடுமலை முன்னாள் ராணுவ வீரர்கள் நலசங்கம் சார்பில் சுதந்திர தினவிழா இன்று கொண்டாடப்பட்டது.

கவர்னர் அரசியல் சாசனத்தை மீறுவதால் தேநீர் விருந்தை புறக்கணிக்கிறோம்

சிவகங்கையில் கார்த்திக் சிதம்பரம் எம்பி பேட்டி

சிவகங்கை, ஆக. 15- கவர்னர் அரசியல் சாசனத்தை மீறி செயல்படுவதால், தேநீர் விருந்தை புறக்கணிக்கிறோம் என கார்த்திக் சிதம்பரம் எம்பி தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் நேற்று சிவகங்கையில் நிருபர்களிடம் கூறியதாவது: கவர்னர் அரசியல் சாசனத்தை மீறி செயல்படுவதால், அதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில், அவர் வழங்கும் தேநீர் விருந்தை காங்கிரஸ் புறக்கணிக்கிறது. விருந்தோம்பல் பண்பாட்டை விட அரசியல் சாசன பண்பாடு பெரிது. மாநில முதல்வர்கள் ஆண்டுதோறும் குறைந்தபட்சம் மூன்று, நான்கு முறை வெளிநாடு செல்ல வேண்டும். அப்போது தான் அங்கு என்ன மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன, தொழில்நுட்ப முன்னேற்றம் உள்ளிட்டவை குறித்து தெரிய வரும். முதலீடுகளை அதிகரிக்கச் செய்யவும் வெளிநாடு செல்வது நல்லயுக்தி. நமது கலாச்சாரத்தோடு விளையாட்டு கலக்க வேண்டும். அப்போது தான் விளையாட்டில் சாதிக்க முடியும். பள்ளிகளில் விளையாட்டை கட்டாய பாடமாக்க வேண்டும். ஒன்றிய அரசு முன்பு பல மசோதாக்களை நிறைவேற்றியது போல், தற்போது வக்பு வாரிய மசோதாவை உடனடியாக நிறைவேற்ற முடியவில்லை. பாஜ கூட்டணியில் உள்ள தெலுங்கு தேசம் கட்சியே வக்பு மசோதாவை கூட்டுக்குழுவுக்கு அனுப்பச் சொல்லி பரிந்துரை செய்துள்ளது. இனிமேல் பெரும்பாலான மசோதாக்கள் கூட்டுக் குழு சென்று தான் வரும். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

ஆகஸ்ட் 15, 2024 வியாழக்கிழமை

அரசியல் திருப்பங்கள்

வங்கதேசத்தில் இடஒதுக்கீட்டுக்கு எதிராக மாணவர்கள் கடந்த மாதமும், இம்மாதமும் நடத்திய போராட்டங்கள் பல இடங்களில் வன்முறைச் சம்பவங்களாக மாறின. இதையடுத்து போலீஸார் துப்பாக்கிச் சூடு நடத்தினர். இந்தப் போராட்டத்தில் மாணவர்கள், காவல்துறையினர், அப்பாவி பொதுமக்கள் என 500-க்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டனர்.

இந்நிலையில் அந்நாட்டுப் பிரதமராக இருந்த ஷேக் ஹசீனா பதவியை ராஜினாமா செய்துவிட்டு இந்தியாவில் தஞ்சம் புகுந்தார். அவர் இந்தியாவில் தற்போது ஒரு பாதுகாப்பான இடத்தில் இருக்கிறார். இதையடுத்து நோபல் பரிசு பெற்ற பேராசிரியர் முகம்மது யூனுஸ் தலைமையில் தற்காலிக அரசு அமைக்கப்பட்டுள்ளது.

அதேபோல, தாய்லாந்து நாட்டிலும் ஆட்சி மாற்றம் ஏற்பட்டுள்ளது. அந்நாட்டின் பிரதமர் ஸ்ரேதத்தா தவிசின் அந்நாட்டின் அரசியல் அமைப்பு நீதிமன்றத்தால் அதிரடியாக பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளார். முன்னாள் வழக்கறிஞர் ஒருவருக்கு சட்டவிரோதமாக அமைச்சர் பதவியை வழங்கியது தொடர்பான வழக்கில் அரசியல் சாசனத்தை பிரதமர் ஸ்ரேதத்தா தவிசின் மீறியதை உறுதி செய்த நீதிமன்றம் அவரை பிரதமர் பதவியில் இருந்து நீக்கி உத்தரவிட்டது. முன்னதாக கடந்த வாரம் தான் தாய்லாந்து எதிர்க்கட்சியை கலைக்க தாய்லாந்து அரசியல் சாசன நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

தென்கிழக்கு ஆசிய நாடான தாய்லாந்தில் கடந்த ஆண்டு நாடாளுமன்றத் தேர்தல் நடைபெற்றது. அத்தேர்தலில் மூவ் பார்வார்ட் கட்சி அதிகமான இடங்களைக் கைப்பற்றியது. ஆனால் அக்கட்சியை ஆட்சி அமைக்க விடாமல் ஸ்ரேதத்தா தவிசினின் கட்சி ஆட்சியை கைப்பற்றியது. தாய்லாந்து நாட்டில் அரச குடும்பத்துக்கு ஆதரவாக ஆளும் கட்சி செயல்பட்டு வருகிறது. இதற்கு எதிராக மூவ் பார்வார்ட் கட்சி ஜனநாயகக் குரல் எழுப்பியது. இது தொடர்பாக அந்நாட்டு அரசியல் சாசன நீதிமன்றத்தில் தேர்தல் ஆணையம் முறையிட்டது. இதனையடுத்து மூவ் பார்வார்ட் கட்சியை கலைக்க வேண்டும் என்கிற அதிர்ச்சி உத்தரவை அரசியல் சாசன நீதிமன்றம் கடந்த வாரம் பிறப்பித்திருந்தது.

இந்த உத்தரவு உலக நாடுகளை அதிர்ச்சி அடையச் செய்தது. அதே நேரத்தில் மூவ் பார்வார்ட் கட்சிக்குப் பதிலாக மக்கள் கட்சி என்ற புதிய கட்சி தொடங்கப்பட்டுள்ளது. மூவ் பார்வார்ட் கட்சியின் அனைத்து எம்பிக்களும் மக்கள் கட்சியில் இணைந்துள்ளனர். இந்த நிலையில் சிறைக்கு சென்ற வழக்கறிஞர் ஒருவருக்கு சட்டவிரோதமாக அமைச்சர் பதவி கொடுத்ததாக பிரதமர் ஸ்ரேதத்தா தவிசினுக்கு எதிராக அரசியல் சாசன நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. இந்த வழக்கை விசாரித்த தாய்லாந்து நீதிமன்றம், பிரதமர் ஸ்ரேதத்தா தவிசின், அரசியல் சாசனத்தை மீறி செயல்பட்டதை உறுதி செய்தது. இதனால் பிரதமர் பதவியில் இருந்து ஸ்ரேதத்தா தவிசினை அதிரடியாக பதவி நீக்கம் செய்தும் உத்தரவிட்டது. இதனால் அந்நாட்டின் ஆளும் கட்சி எம்பிக்கள் ஒன்று கூடி புதிய பிரதமரைத் தேர்ந்தெடுக்க உள்ளனர்.

வங்கதேசத்தில் அண்மையில்தான் மத வன்முறையாளர்களால் பிரதமர் பதவியை ஷேக் ஹசீனா இழந்தார். அத்துடன் உயிருக்கு அஞ்சி இந்தியாவில் தஞ்சம் அடைந்துள்ளார். இந்த நிலையில் தற்போது தென் கிழக்கு ஆசிய நாடான தாய்லாந்திலும் அடுத்தடுத்து அரசியல் திருப்பங்கள் நிகழ்ந்து வருகின்றன.

வங்கிக்கு சென்ற இளம் பெண் மாயம்

ஈரோடு, ஆக. 15- சத்தியமங்கலம் அடுத்துள்ள கொண்டப்பநாயக்கன்பாளையத்தை சேர்ந்தவர் நடராஜன். இவரது மனைவி திவ்யபாரதி (26). இவர்களுக்கு ஒரு மகன் உள்ளார்.

கடந்த 3 மாதங்களுக்கு முன்பு தனது பெற்றோர் வீட்டிற்கு குழந்தையுடன் சென்ற திவ்யபாரதி மீண்டும் கணவர் வீட்டிற்கு செல்லாமல் வீட்டிற்கு அருகில் உள்ள ஒரு இ-சேவை மையத்தில் பணியாற்றி வந்தார். இந்நிலையில் கடந்த 13ம் தேதி வழக்கம் போல வேலைக்கு சென்ற திவ்ய பாரதி சத்தியில் உள்ள வங்கி ஒன்றிக்கு சென்று வருவதாக கூறிச்சென்றவர் திடீரென மாயமானார். தகவல் அறிந்த பெற்றோர் பல்வேறு இடங்களில் தேடியும் எவ்வித தகவலும் கிடைக்காததால் சத்தி போலீசில் புகார் செய்தனர். போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

இயற்கை வேளாண் இடுபொருள் தயாரிப்பு பயிற்சி

ஈரோடு, ஆக. 15- பவானி வட்டாரத்தில் இயற்கை வேளாண் இடுபொருட்கள் தயாரித்தல் குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது.

பவானி வட்டாரத்தில் வேளாண்மை-உழவர் நலத்துறை சார்பாக வேளாண்மை தொழில் நுட்ப மேலாண்மை முகமை திட்டத்தின் கீழ் இயற்கை வேளாண் இடுபொருட்கள் தயாரித்தல் தொடர்பான பயிற்சி சின்னபுலியூர் கிராமத்தில் நடைபெற்றது. இப்பயிற்சி முகாமிற்கு வேளாண்மை உதவி இயக்குநர் கனிமொழி தலைமை தாங்கினார். முகாமில் இயற்கை வேளாண் இடுபொருட்கள் தயாரிக்கும் முறைகள் மற்றும் பூச்சி, களை மேலாண்மை முறைகள் குறித்தும் இயற்கை வேளாண்மை செய்வதற்கான வழிமுறைகள், பாரம்பரிய நெல் ரக சாகுபடி முறைகள் மற்றும் பசுந்தாள் பயிர்களின் பயன்பாடுகள் குறித்து விளக்கி கூறப்பட்டது.

மேலும் வேளாண்மைத் துறை சார்ந்த மானியத் திட்டங்கள் குறித்து விவசாயிகளுக்கு எடுத்துரைக்கப்பட்டது. முகாமில் உழவன் செயலிபதிவேற்றம், இ நாம் மற்றும் இ வாடகை குறித்து விவசாயிகளுக்கு விளக்கி கூறப்பட்டது. முகாமில் விவசாயிகள் அதிகாரிகள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

சிவகிரி விற்பனை கூடத்தில்

ரூ.20.11 லட்சத்துக்கு நிலக்கடலை ஏலம்

மொடக்குறிச்சி, ஆக. 15- சிவகிரி ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் நிலக்கடலைக் காய் ஏலம் நடைபெற்றது. ஏலத்தில் சுற்றுவட்டார பகுதிகளை சேர்ந்த விவசாயிகள் 964 மூட்டைகளை விற்பனைக்கு கொண்டு வந்தனர். இதில் ஒரு கிலோ குறைந்தபட்ச விலையாக ரூ.63.40 காசுக்கும், அதிகபட்ச விலையாக ரூ.74.20 காசுக்கும், சராசரி விலையாக ரூ.68.40 காசுக்கும் ஏலம் போனது. மொத்தம் 30 ஆயிரத்து 506 கிலோ எடையுள்ள நிலக்கடலைக் காய் ரூ.20 லட்சத்து 11 ஆயிரத்து 629 ரூபாய்க்கு விற்பனையானது.

ஈரோடு மாவட்ட பதிவாளர் மற்றும் துணைச் சீட்டுப் பதிவாளர் நீதிமன்றம் ரங்கம்பாளையம், ஈரோடு - 638 009
முன்னிலை: திருமதி.பா.விமலாதேவி அவர்கள்
மத்தியஸ்த வழக்கு எண் : 32/2024
M/s தனலட்சுமி சீனிவாசன் சிட் பண்ட்ஸ் பிரைவேட் லிமிடெட், ரெப் பை ஃபோர்மேன், திரு C. பாலமுருகன், F5,முதல் தளம், சக்தி துரைசாமி காம்ப்ளக்ஸ், EVK சம்பத் சாலை, இரண்டாவது தெரு, மூலப்பட்டறை ரோடு, ஈரோடு -638003.
...வாதி

எதிர்
3.Mr.GOPAL R, S/o.RAMASAMY.A No:10, VINAYAGAR KOVIL STREET, NADAR MEDU, ERODE-638002
5.Mr.PRAVEENKUMAR.S,S/o.SUNDARAM No: 20, SOUTH RAMALINGAPURAM, ELLAIGRAMAM, CHENNIMALAI, PERUNDURAI, ERODE-638051.
...பிரதிவாதிகள்

அறிவிப்பு

வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு 19/08/2024 அன்று பிற்பகல் 12.30 மணிக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும். பிரதிவாதிகள் மேற்படி தேதியில் விசாரணைக்கு தவறாது ஆஜராக வேண்டியது. தவறினால் வழக்கில் தோன்றாத தரப்பினராக கருதி மேற்படி தேதியிலேயே ஒரு தலைப்பட்சமாக தீர்ப்பு வழங்கப்படும் என இதன் மூலம் அறிவிக்கப்படுகின்றது.

(கோர்ட் உத்தரவுப்படி)
துணைச்சீட்டு பதிவாளர்
ஈரோடு பதிவு மாவட்டம், ஈரோடு-9

பிரைம் அர்பன் டெவலப்மென்ட் இந்தியா லிமிடெட்

PRIME URBAN DEVELOPMENT INDIA LTD — we make your dreams come true —

CIN: L70200TZ1936PLC000001

பதிவு அலுவலகம் : கதவு எண்.164/18 மருதாச்சலபுரம் மெயின் ரோடு, ரேஷன் கடை எதிரில், 60 அடி ரோடு, திருப்பூர் - 641 603 (தமிழ்நாடு, இந்தியா)

E-mail: companysecretary@ptlonline.com, Web: www.ptlonline.com

30.06.2024 அன்று முடிவடைந்த காலாண்டிற்கான தனித்த மற்றும் ஒருங்கிணைந்த தணிக்கை செய்யப்படாத நிதி முடிவுகளின் சுருக்கம்

(ஒரு பங்கின் வருமானம் தவிர மற்ற தொகைகள் யாவும் ₹ இலட்சங்களில்)

வ. எண்	விபரங்கள்	Standalone Results			Consolidated Results		
		காலாண்டு முடிவு 30.06.2024 Unaudited	தொடர்புடைய காலாண்டு முடிவு 30.06.2023 Unaudited	ஆண்டு முடிவு 31.03.2024 Audited	காலாண்டு முடிவு 30.06.2024 Unaudited	தொடர்புடைய காலாண்டு முடிவு 30.06.2023 Unaudited	ஆண்டு முடிவு 31.03.2024 Audited
1	செயல்பாடுகளின் மூலம் நிகர வருமானம் மற்றும் இதர வருமானம்	25.74	24.65	475.17	23.87	201.38	1,105.79
2	வரிக்கு முன்பு உள்ள நிகர லாபம் / (நஷ்டம்) (மற்ற அசாதாரண செலவினங்களுக்கு முன்)	(43.30)	(61.09)	(211.37)	(45.00)	(58.92)	(203.99)
3	வரிக்கு முன்பு உள்ள நிகர லாபம் / (நஷ்டம்) (மற்ற அசாதாரண செலவினங்களுக்கு பின்)	(43.30)	(61.09)	(211.37)	(45.00)	(58.92)	(203.99)
4	வரிக்கு பின்பு உள்ள நிகர லாபம் / (நஷ்டம்) (அசாதாரண செலவினங்களுக்கு பின்)	**(43.30)**	**(61.09)**	**(211.37)**	**(45.00)**	**(58.92)**	**(204.07)**
5	இக்காலத்திற்கான மொத்த விரிவான வருமானம் (இக்காலத்திற்கான வரிக்கு பின் நிகர லாபம் மற்றும் வரிக்கு பிந்தைய ஏனைய விரிவா வருமானமும் உள்ளிட்டது)	(43.30)	(61.09)	(212.94)	(45.12)	(58.90)	(205.76)
6	செலுத்தப்பட்ட ஈக்விட்டி பங்குத்தொகை (ஒரு பங்கிற்கு ரூ.2/- முக மதிப்பு)	532.87	532.87	532.87	532.87	532.87	532.87
7	ரிசர்வுகள் (மறுமதிப்பீடு ரிசர்வுகள் நீங்கலாக) கடந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் உள்ளது போன்றது)			**(715.67)**			**(909.70)**
8	ஒரு பங்கின் வருவாய் (Face Value of Rs.2/- each) not annualised) Basic / Diluted EPS	(0.16)	(0.23)	(0.79)	(0.17)	(0.22)	(0.77)

குறிப்பு:

1. தணிக்கை செய்யப்படாத தனித்த மற்றும் ஒருங்கிணைந்த நிதி முடிவுகள் இந்தியன் கணக்கியல் தரநிலைகளில் (Ind AS 34) நிறுவனங்கள் சட்டம் 2013-ன் விதிகள் பொருந்தக்கூடிய மற்றும் SEBI (Listing Obligation and Disclosure Requirements) விதிமுறைகள் 2015இன் பத்திரங்கள் மற்றும் வழிகாட்டுதல்களால் வழங்கப்பட்ட அங்கீகாரம் மற்றும் அளவீடுகளுக்கு ஏற்ப தயாரிக்கப்பட்டுள்ளன.
2. மேலே குறிப்பிடப்பட்டுள்ள முடிவுகளை தணிக்கை குழு மதிப்பாய்வு செய்து 2024ம் ஆண்டு ஆகஸ்ட் 14 ம் தேதி நடைபெற்ற கூட்டத்தில் இயக்குனர் குழுவினால் அங்கீகரிக்கப்பட்டது. Regulations 33 of SEBI (Listing and other Disclosure Requirements) Regulations, 2015-ன் படி இந்த முடிவானது சட்டப்பூர்வ தணிக்கையாளர்களால் வரையறுக்கப்பட்ட மதிப்பாய்வு.
3. மேலே உள்ளவை காலாண்டு நிதி முடிவுகளின் விரிவான வடிவத்தின் சுருக்கம் ஆகும். இதன் விரிவான முடிவுகளை நிறுவனத்தின் வலைதளமன www.ptlonline.com மற்றும் BSE லிமிடெட் lwww.bseindia.com வலைதளத்திலும் பார்வையிடலாம்.

(For and on behalf of the Board)
புருஷோத்தம்தாஸ் பட்டோடியா
தலைவர் மற்றும் நிர்வாக இயக்குனர்
DIN 00032088

இடம்: மும்பை
தேதி: 14.08.2024

Printed & Published by **Mr. Syed Mohamed,** on behalf of M/s. Kal Publications Pvt Ltd. and Printed at Murasu Offset Press No.1, Vincent Road, Coimbatore-641001 and Published at No.1, Vincent Road, Coimbatore-641001.
Editor: Mr. Syed Mohamed, RNI Regn: TNTAM/2005/51848 Phone: 0422 4467676, Advt: 0422 4467655, E-mail: tmurasucbe@gmail.com